# அளிகம்பை பிரதேச மக்களின் பொருளாதார அபிவிருத்தியில் தொழில் முறையின் வகிபாகம்
# The Role of Job Opportunities in Economic Development

M.S.F. Sumaiya[1], M.A.F. Ilma[2], F. Faarah Liyas[3], M.I. Inshaf Iqbal[4] & A.M.M. Mashood[5]
[1,2&3]Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
[4&5]Department of Arabic Language, South Eastern University of Sri Lanka
msfathimasumaiya@gmail.com, ilmaanees97@gmail.com, lifaarah97@gmail.com, inshafiq4@gmail.com & mashoodmawahib@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதன் தனது தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காகவும் அதற்கான செலவீனங்களை எதிர்கொள்வதற்காகவும் நல்ல வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு கடுமையாக முயற்சிக்கின்றான். இவ்வாறே ஒவ்வொரு மக்களும் அவர்களினுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஜீவனோபாய தொழில்களில் வெற்றியடைந்தும் உள்ளனர். அந்த வகையில் அளிகம்பை பிரதேச மக்களின் பொருளாதாரமானது அவர்களினுடைய வாழ்வில் வருமானம் மற்றும் செலவீனத்தை பொறுத்து வேறுபடுகின்றது. அவ்வாறு இருக்கையில் நாம் இவ் ஆய்விற்கு உட்படுத்திய இச்சமூகமானது வன ஜீவராசிகளாக இருந்து இன்று நாட்டுப்புறத்தில் குடியேறிய மக்களாக உள்ளனர். இவ்வாறான மக்களினுடைய வாழ்வின் பொருளாதார அபிவிருத்தியில் தொழில் முறையின் வகிபாகம் தொடர்பான இவ்வாய்வானது கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு பிரதேச சபை பிரிவிற்குட்பட்ட அளிகம்பை கிராமத்தை மையமாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தியில் தொழில்முறை பற்றிய இவ் ஆய்வானது இக்கிராமத்தின் பொருளாதார நிலைகளைக் கண்டறிதல், அபிவிருத்திக்கான உள்ளார்ந்த வளவாய்ப்புக்களை இனங்காணல், தொழில் அபிவிருத்திக்கான பரிந்துரைகளை முன்மொழிதல் ஆகியவற்றின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது. அவ்வகையிலே இவ் ஆய்வானது முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக கள ஆய்வு, வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் அவதானிப்பினூடாக சேகரிக்கப்பட்டதோடு மேலும் இரண்டாம் நிலைத் தரவுகளாக இக்கிராம மக்களினுடைய வாழ்க்கை பற்றிய புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளம் போன்றவைகளிலிருந்தும் மேலதிக தகவல்கள் பெற்றுகொள்ளப்பட்டன.

இந்த ஆய்வுப் பிரதேசத்தில் வாழும் மக்கள் விவசாயம், கூலிக் கைத்தொழில், மீன்பிடி, வீட்டுத்தோட்டம், வீட்டில் சொந்தமாக கடை நடாத்துதல், தையல், அரச தொழில் மற்றும் ஆடு, மாடு வளர்ப்பு போன்றவைகளையே தமது ஜீவனோபாய தொழில்களாக கொண்டுள்ளனர். இத்தொழில் முயற்சியினூடாக இம்மக்கள் பொருளாதார அபிவிருத்தியில் பாரிய பங்கினை வகிக்கின்றனர் என்பது எமது ஆய்வுத்தரவுகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இது இம்மக்களின் முன்னேற்றத்தை நோக்கிய சிறு நகர்வேயாகும். அவர்களின் இப்பொருளாதார அபிவிருத்தியில் மென்மேலும் வளர்ச்சி காண வேண்டுமெனில் அரச மற்றும்

அரச சார்பற்ற நிறுவனங்களும் இம்மக்களுக்கான உதவிகளை வழங்கி கை கொடுக்க வேண்டும். இதனூடாக இவர்களின் தாழ்மை மனப்பாங்கு நீக்கப்பட்டு சமூகத்தில் ஏனைய மனிதர்களைப் போல் சம அந்தஸ்து உடையவர்களாக மாற்றம் பெறுவர். இவ் ஆய்வின் மூலம் இந்த பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வழிகளும் பரிந்துரை செய்யப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்:** அபிவிருத்தி, பொருளாதாரம், தொழில்முறையில் வருமானம், செலவீனங்களின் வளர்ச்சி

**அறிமுகம்**

ஒரு நாட்டில் அல்லது பிரதேசத்தில் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஓர் முன்னேற்றகரமான நிலை அபிவிருத்தி எனப்படும். மேலும் அபிவிருத்தி என்பது ஒரு நாட்டில் வாழ்ந்து வரும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் போதிய அளவில் வருமானம் கிடைத்தல், அக்குடும்பத்தில் உழைக்கக்கூடிய ஒவ்வொரு நபருக்கும் ஒரு ஜீவனோபாய மார்க்கம் அல்லது தொழில் இருத்தல், அக்குடும்ப உறுப்பினர்களுக்கு கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தல், அரசாங்கத்தின் அபிவிருத்திச் செயன்முறையில் பொதுமக்கள் பங்கேற்று முடிவுகளை மேள்கொள்வதற்கு வாய்ப்பளித்தல் போன்ற நிலைமைகள் காணப்பட்டு, அந்நாடு ஒரு தேசம் என்ற வகையில் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான ஆற்றலைக் கொண்டிருந்தால் அந்நிலையை அபிவிருத்தியென டட்லி சியர்ஸ் குறிப்பிடுகின்றார்.

அவ்வாறே பொருளாதாரம் என்பது நாட்டின் அறியப்பட்ட பொருளாதார அமைப்பையோ அல்லது இதர நிலப்பகுதியையோ கொண்டுள்ளது. அப்பகுதியின் சமூக ரீதியான உற்பத்தியில், பறிமாற்றத்தில், விநியோகத்தில் மற்றும் பொருட்கள், சேவைகளின் நுகர்வில் பங்கேற்கும் வகையில் பொருளாதாரக் காரணிகளைக் கொண்டுள்ளது. பொருளாதாரத்தின் முழுமையான வளர்ச்சி எனும் போது பொருளாதார உற்பத்தி அதிகரிப்பு, அடிப்படை தேவைகளின் விருத்தி, தொடர்பாடல் ரீதியான வளர்ச்சி என்பனவற்றைக் கூற முடியும். அந்த வகையில் அளிகம்பை பிரதேசத்து மக்களின் பொருளாதாரத்தில் தொழில் முறையின் அபிவிருத்தி பற்றிய ஆய்வாக இது அமைகின்றது.

பழங்குடியினர் என்று அழைக்கப்பட்ட இம்மக்கள் ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்ததாகவும் இவர்களின் பிறப்பிடம் இந்தியா எனவும் இவர்கள் பல வருடங்களுக்கு முன்னரே இலங்கைக்கு வந்துவிட்டனர் என்றும் கூறப்படுகின்றது. (சீனிவாச சர்மா, 1977).

இலங்கையில் வாழும் பழங்குடியினர்களில் ஒரு பிரிவினரே அளிகம்பை கிராமத்தவர்கள். இம்மக்கள் கிறிஸ்தவ பாதிரியார் அருட்திரு. கொட்பிரீகுக் என்பவரால் அளிகம்பை பிரதேசத்தில் 1942 ஆம் ஆண்டில் குடியமர்த்தப்பட்டார்கள். (குகபாலன், 2000) பின்னர் 1990 ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கில் நடைபெற்ற வன்முறையினால் இங்கு பல உயிர்கள், உடைமைகள் சேதமாகின. இதனால் இங்கிருந்து வெளியேறியுள்ளனர். 2001 ஆம் ஆண்டளவில் மீண்டும் அலிகம்பை பிரதேசத்திற்கு திரும்பியுள்ளனர். இவ்வாய்வுப்

பிரதேசத்தில் மொத்தம் 309 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். (ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் புள்ளிவிபரம் திரட்டு, 2013)

ஆரம்ப காலத்தில் இவர்கள் தங்களது வாழ்வாதாரத்தை தேடிக்கொள்வதற்காக மந்தை, வேட்டை நாய்கள் மற்றும் கோழிகள், குரங்குகள், நாகபாம்புகள், புல்லாங்குழல், சாத்திரம் பார்த்தல் போன்றவற்றையும் பெண்கள் பாய் பின்னலையும் தமது தொழிலாகக் மேற்கொண்டுள்ளனர். அன்றைய காலத்தின் முக்கிய தொழிலாக பாம்பாட்டுதல் காணப்பட்டாலும் இன்று இது அரிதாகிவிட்டது. பாம்பிலிருந்து பெறக்கூடிய பொருட்களை விற்றும் பணமாக்கிக் கொள்வார்கள். வனஜீவராசிகளான இவர்களினுடைய வாழ்வில் இன்று பொருளாதார ரீதியாக ஓரளவு மாற்றம் கண்டுள்ளது என்பதனை இவ்வாய்வினூடாக காண முடியும். ஆரம்பத்தில் விவசாயத் தொழிலில் ஆர்வமின்றிருந்தவர்கள் இன்று வயல் நிலங்களை சொந்தமாகவும், குத்தகைக்கும், கூலிக்கும் பயன்படுத்துகின்றனர் மற்றும் தையற் தொழில், கால்நடைகள் வளர்த்தல் (ஆடு, மாடு, கோழி), வீட்டுத் தோட்டம், வீட்டில் கடை நடாத்துதல், கூலித் தொழில்களாக வேளாண்மை, எண்ணையடித்தல், புல் பிடுங்குதல், விறகு வெட்டுதல் போன்றவையும் மீன் பிடித்தல் மற்றும் அரச தொழில் வாய்ப்பையும் பெற்ற (ஆசிரியர், பேரூந்து சாரதி) நபர்களும் காணப்படுகின்றனர் என்பது மகிழ்சிக்குறிய விடயமாகும். இச்சமூகத்தைச் சேர்ந்த ஜெகன் எனும் இளைஞனொருவர் ஆலையடிவேம்பு பிரதேச சபையின் உப தவிசாளராக பதவி வகித்துள்ளார். (மப்றூக், 2014) ‘‘நான் இக்கிராமத்திலுள்ள பாலர் வகுப்பு மாணவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுக்கின்றேன்.’’ நேர்காணலின் போது இக்கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியராக தொழில் புரியும் வர்ஷிணி இவ்வாறு கூறினார். தமது பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்காக தொழில் வாய்ப்புக்களைத் தேடி வெளிநாட்டிற்கு சென்றவர்களும் உள்ளனர். மேலும் இம்மக்களினுடைய பொருளாதாரத்தினை அபிவிருத்தி அடையச் செய்வதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளினூடாக உதவித் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதா என்பதனை அறிவதுடன் அபிவிருத்திக்கான உள்ளார்ந்த வளவாய்ப்புக்களை இனங்கண்டு, இவர்களின் பொருளாதாரத்தினை கண்டறியும் முகமாகவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் வினாக்கள்**

1. இக்கிராமிய மக்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான பொருளாதார நிலைகள் போதுமானதாக உள்ளதா?
2. அரசாங்கத்தினால் சுய தொழில் வாய்ப்புக்கள் யுவதி மற்றும் இளைஞர்களுக்கு ஏற்படுத்திக்கொடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றதா?
3. இம்மக்களினுடைய வாழ்க்கை மற்றும் சமூகக் கட்டமைப்பிலும் பொருளாதார முன்னேற்றத்தை எவ்வாறு ஏற்படுத்தலாம் மற்றும் அதற்கான பரிந்துரைகளை முன்வைக்குக?

**ஆய்வுப் பிரச்சினை**

சமூகத்தில் ஒவ்வொரு மக்கள் பிரிவினர்களும் ஒவ்வொரு விதமாக வாழ்ந்து வருகின்றனர். இந்த வகையில் வன ஜீவராசிகளை எடுத்துக் கொண்டால், வன ஜீவராசிகள் என்போர் வனப் பிரதேசங்களிலே வாழ்ந்து வந்தவர்கள். இவர்கள் சமூகத்துடன் சேர்ந்து நாட்டுப்புறங்களில் வாழ்க்கையை தொடரும் போது பல சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர். அவர்களுடைய வாழ்க்கையில் கல்வியாக இருந்தாலும் சரி, ஏனைய துறைகளாக இருந்தாலும் சரி அனைத்துத் துறைகளிலும் இவர்கள் சவால்களை எதிர்கொள்கின்றனர்.

அந்த வகையில் இவர்களது பொருளாதாரத்தை எடுத்துக்கொண்டால் தமது ஜீவனோபாயத் தொழில்களுக்காக வேண்டி பாரிய சவால்களுடன் நாட்டுப் புறங்களில் வாழவேண்டியுள்ளது. அந்த வகையில் வன ஜீவராசிகளாக வாழ்ந்து விட்டுத் தற்போது அளிகம்பை பிரதேசத்தில் குடிபெயர்ந்து வாழும் மக்களின் தொழில் முறைகள் பற்றிய தகவல்களை சேகரித்து அவர்களது செலவீனங்கள், பொருளாதாரத்தில் அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் போன்றவற்றை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

1. பொருளாதார நிலைகளைக் கண்டறிதல்.
2. அரசாங்கத்தினால் சுய தொழில் வாய்ப்புக்களை யுவதி மற்றும் இளைஞர்களுக்கு ஏற்படுத்திக்கொடுப்பதற்கான முயற்சிகளை எடுத்தல்
3. அவர்களினுடைய வாழ்க்கை மற்றும் சமூகக் கட்டமைப்பிலும் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துதல் மற்றும் அதற்கான பரிந்துரைகளை முன்மொழிதல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வை மேற்கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதேசமாக இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள அளிகம்பை எனும் கிராமமாகும். இப்பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டுள்ள வனஜீவராசிகளினுடைய தகவல்கள் அப்பிரதேச கிராம சேவகர் மற்றும் கிறிஸ்தவ பாதிரியார் மூலமும் சேகரிக்கப்பட்டன.

இவ்வாய்வானது கள ஆய்வு என்பதனால் பண்புசார் தரப்படுத்தலினை தழுவி நிற்பதுடன் ஆய்விற்கான தரவுகள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலை மூலகங்களிலிருந்து சேகரிக்கப்பட்டன. இவ்வாய்வினை மேற்கொள்கின்ற போது கள ஆய்வு, நேர்காணல், அவதானிப்பு, வினாக்கொத்து போன்றனவை முதலாம்நிலைத் தரவுகளாக பயன்படுத்தப்பட்டன.

மேலும் இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இம் மக்களின் வாழ்க்கை முறைப் பற்றிய புத்தகங்கள், இணையத்தளத்திலிருந்தும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. முறையாக பெறப்பட்ட அனைத்து தரவுகளும் Mirosoft Exel ஐ கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு அப்பகுப்பாய்வானது பின்வரும் ஆய்வாக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

குகபாலன்.கா (2000) என்பவரால் எழுதப்பட்ட ‘‘இலங்கை பழங்குடிகள்” எனும் தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையில் வனக்குறவர்களின் வாழ்வியல், பொருளாதார சமூக மாற்றங்களுக்கான அவசியம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

மப்றூக் (2011) என்பவரால் “அளிகம்பை வனக்குறவர் - கவனிக்கப்படாத சமூகம்’’ எனும் தலைப்பில் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் அளிகம்பை கிராம வரலாறு மக்களின் வாழ்வில் மாற்றத்தை எதிர்பார்க்கும் இளைஞர்கள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

மப்றூக் (2014) என்பவரால் “அளிகம்பை குறவர் சமூகத்தின் கதை’’ எனும் தலைப்பில் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் அளிகம்பை கிராம வரலாறு மக்களின் வாழ்வில் மாற்றத்தை எதிர்பார்க்கும் இளைஞர்கள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

நிஷாந்தி உதயகுமாரன் (2013) என்பவரால் ‘‘அளிகம்பை கிராமத்தின் சமூகக் கட்டமைப்பு’’ எனும் தலைப்பில் எழுதப்பட்ட சமூகவியல் ஆய்வில் அளிகம்பை மக்களது வாழ்க்கை மற்றும் அவர்களின் தொழில்முறை, பொருளாதாரம் ஆகியவை தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

குலசேகரன்.இ (2002) என்பவரால் “அளிகம்பை வனக்குறவர்களும் வாழ்க்கை முறையும்’’ எனும் தலைப்பில் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் அளிகம்பை கிராம வரலாறு, அளிகம்பை மக்களின் பாரம்பரியம், ஆரம்பகால தொழில்முறை, கலாசாரம் என்பன தொடர்பான விளக்கங்கள் பெறப்பட்டுள்ளன.

ரிஸ்வான்.எம், ரமீஸ்.ஏ, லும்னா.என் (2017) என்போரால் எழுதப்பட்ட “Social, Econamic and Cultural Challenges Confronting Gypsies in Aligambai Village, Sri Lanka.” எனும் தலைப்பில் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் அளிகம்பை கிராம மக்கள் சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக எதிர்கொள்ளும் சவால்களை கண்டறிவது தொடர்பாக இவ்வாய்வு செய்யப்பட்டுள்ளது.

பிக்கீர்.எஸ்.எல்.எம், (2017) என்பவரால் ‘‘அடிப்படை வசதிகளை இழந்து தவிக்கும் “அளிகம்பை வனக்குறவர்கள்’’ எனும் தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையானது வாரமஞ்சரி எனும் சஞ்சிகையில் இவர்களினுடைய பொருளாதாரத்தின் வீழ்ச்சி பற்றி பேசப்பட்டுள்ளது.

**தரவு முன்வைத்தலும் தரவுப் பகுப்பாய்வும்**

**அளிகம்பை பிரதேச மக்களிற்கு கிடைக்கப்பெறும் வருமானம்:**

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அளிகம்பை பிரதேச மக்களின் தொழில்முறையை நோக்குகின்ற போது, ஆரம்ப காலங்களில் இவர்கள் பாம்பாட்டுதல், வேட்டையாடுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டனர். பின்னர் தொழிலில் ஈடுபட முடியாத நிலையில் பிச்சையெடுக்க தொடங்கியதாக அறிய முடிகின்றது. இதனைத் தொடர்ந்து விவசாயம், கூலி, மீன்பிடி போன்ற தொழில்களில் ஈடுபடவும் ஆரம்பித்தனர்.


அந்த வகையில் நாம் மேற்கொண்ட கள ஆய்வின் போது எமது குழுவானது அளிகம்பை வாழ் மக்களில் 50 குடும்பங்களிடம் தொழில் பற்றிய தரவுகளைப் பெற்றுக்கொண்டது. அவர்கள் கூலித்தொழில், விவசாயம், அரச தொழில், வீட்டில் கடை, வீட்டுத்தோட்டம், மீன்பிடி, மாடு, ஆடு மற்றும் கோழி வளர்ப்பு, தையல் போன்ற பல்வேறு தொழில்களை மேற்கொள்வதாக அறியக் கிடைத்தது. இத்தொழில்கள் அவர்களது பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்வதுடன், வெளிநாட்டு வரவு, தேவாலயத்தின் உதவி, உறவினர் உதவிபோன்றனவும் அவர்களின் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தக் கூடியதாக காணப்படுகின்றன.

இவற்றுள் கூலித்தொழிலிலேயே அதிகமானோர் ஈடுபடுகின்றனர். வேளாண்மை, எண்ணையடித்தல், புல் பிடுங்குதல், கடையில் கூலி வேலை போன்ற கூலித் தொழில்களில் 40 குடும்பங்கள் ஈடுபடுகின்றன. அடுத்தபடியாக விவசாயத்தை எடுத்துநோக்குகின்ற போது 20 குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். சிலர் தமது சொந்த வயல்களில் கூலிக்கு ஆள் வைத்து விவசாயம் செய்வதோடு மற்றும் சிலர் பிறரது விவசாய நிலங்களை குத்தகைக்கு எடுத்தும் விவசாயம் புரிகின்றனர். நாம் நேர்காணல் செய்த குடும்பங்களில் ஒருவர் மாத்திரமே அரச தொழிலில் ஈடுபடுவதாகக் குறிப்பிட்டார். வீட்டில் கடை வைத்துள்ளவர்களின் எண்ணிக்கை 5 ஆகக் காணப்படுவதோடு, வீட்டுத்தோட்டம் செய்யும் குடும்பங்களின் எண்ணிக்கை 10 ஆகும்.

அத்துடன் மீன்பிடித் தொழிலை எடுத்துநோக்குகின்ற போது, நாம் நேர்காணலுக்கு உட்படுத்தியவர்களுள் அதிகமானோர் இத்தொழிலில் ஈடுபடுவதுடன் அவர்களில் சிலர் மீன்பிடித் தொழிலை தமது ஜீவனோபாயமாகக் கொண்டுள்ளதுடன் சிலர் தமது பகுதி நேரத் தொழிலாகவும் மற்றும் சிலர் பொழுதுபோக்கிற்காகவும் மீன்பிடித்தலில் ஈடுபடுகின்றனர்.

மாடு வளர்ப்பில் 5 குடும்பங்களும், ஆடு வளர்ப்பில் 7 குடும்பங்களும், கோழி வளர்ப்பில் 10 குடும்பங்களும் ஈடுபடுகின்றன. தையலினூடாக தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை 3 ஆகும். வெளிநாட்டில் தொழில் புரிகின்ற 4 நபர்கள் நாம் நேர்காணலுக்கு உட்படுத்திய குடும்பங்களுள் காணப்பட்டனர். இவ் அலிகம்பை பிரதேச மக்கள் மேற்குறிப்பிட்ட தொழில் முறைகள் மூலம் தமது பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். இவை தவிர வேறு உதவிகளும் இவர்களின் பொருளாதாரத்திற்கு உறுதுணையாக உள்ளன. பொதுவாக தேவாலயத்தின் உதவி அனைவருக்கும் கிடைக்கப்பெறுகின்றது. பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுவதுடன், வீட்டுத்திட்ட உதவிகளும் தேவாலயத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. அத்துடன், உறவினர்களின் உதவி தமக்கு கிடைக்கப்பெறுவதாக 5 குடும்பத்தினர் கூறினர். திருமண சடங்குகளின் போதான உதவி மற்றும் கடனுதவி போன்ற பல உதவிகள் உறவினர்களினூடாகக் கிடைக்கப்பெறுகின்றன. இத்தகைய தேவாலய, உறவினர் உதவியினூடாக இம்மக்கள் தமது பொருளாதாரத் தேவைகளில் சிறுபாகத்தினையேனும் பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

இவ்வாறு அளிகம்பை பிரதேச மக்கள் வருமானம் ஈட்டக் கூடிய தொழில் முறைகளையும் அவற்றை மேற்கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கையையும் ஒரே பார்வையில் கீழ்வரும் பட்டை நிழல்படம் (Bar chart) மூலம் காணலாம்.




**அளிகம்பை பிரதேச மக்களின் செலவீனம்:**

இவ் அளிகம்பை பிரதேச மக்கள் தாம் மேற்கொள்கின்ற மேற்கூறப்பட்ட தொழில்களினூடாக ஈட்டும் வருவாய் அவர்களின் அன்றாட பொருளாதாரத் தேவைகளுக்காக செலவிடப்படுகின்றன.

**உணவு** : உணவுத் தேவையை நோக்குகின்ற போது, இது அனைவருக்குமான அத்தியாவசியத் தேவையாகும். 50 குடும்பங்களும் தமது வருவாய்க்கு ஏற்ப உணவிற்காக செலவிடுகின்றனர்.

ரூபா

100 - 500 :- 20 குடும்பங்கள்

600 - 1000 :- 18 குடும்பங்கள்

1000 - 1500 :- 12 குடும்பங்கள்

**ஆடை** : உடைக்காக இவர்கள் அதிக செலவிடுவது காணக் கிடைத்தது. இவர்கள் கொண்டாட்டங்களுக்காக உடை கொள்வனவிற்கே அதிகம் செலவிடுகின்றனர். சிலர் தமது வருவாய் போதுமானதாக இல்லாத போது கடன் எடுத்து உடை கொள்வனவு செய்கின்றனர். இவர்களது உடைத் தேவைக்கான வருடாந்த செலவீனங்களைப் பின்வருமாறு நோக்கலாம்.

ரூபா

800 - 1000 :- 3 குடும்பங்கள்

1000 - 5000 :- 7 குடும்பங்கள்
5000 - 10,000 :- 13 குடும்பங்கள்
10,000 - 20,000 :- 12 குடும்பங்கள்
20,000 இற்கு மேல் :- 15 குடும்பங்கள்

**மின்சாரம் :** மின்சாரத்திற்கான செலவைப் பொறுத்தவரையில் அனைத்து வீடுகளிலும் மின்சார வசதி காணப்படவில்லை. மின்சார வசதியினைக் கொண்டுள்ள குடும்பங்களுள் பெரும்பாலான குடும்பங்கள் மின்சாரத்திற்காக மாதாந்தம் ரூபா 1000 இற்கு உட்பட்டதாகவே செலவிடுகின்றனர். ஒரு சில குடும்பத்தினரே ரூபா 2500 வரையில் மின்சாரத்திற்காக செலவிடுகின்றனர்.

**நீர்** : இக்கிராமத்தில் அனைவருமே நீர்க்கட்டணத்திற்காக செலவிடுவதில்லை. பெரும்பாலானோர் பொதுக்கிணறு மூலமே நீர் வசதியைப் பெற்றுக் கொள்கின்றனர். குடிநீர் குழாயினூடாக நீரினைப் பெறுகின்றவர்களுக்கு பொதுவாக 2 மாதங்களுக்கு ரூபா 1000 செலவாகின்றது.

**எரிவாயு (Gas) பாவனை :** எரிவாயு பயன்பாட்டினைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட 15 குடும்பங்களே எரிவாயு பயன்படுத்துகின்றனர். இவர்கள் எரிவாயுவிற்காக 1 அல்லது 2 மாதங்களுக்கு ரூபா 1000 - 2000 வரையிலான பெறுமதியினையே செலவிடுகின்றனர். ஏனையோர் விறகடுப்பினைப் பயன்படுத்துகின்றனர்.

**கல்வி :** கல்வித் தேவைக்காக ஒவ்வொரு குடும்பமும் தமது பிள்ளைகளின் தேவைக்கேற்ப மாதாந்தம் ரூபா 200 - 1000 வரை செலவிடுகின்றனர்.

**வட்டி :** இக்குடும்பங்களில் 5 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வட்டிக்காக செலவிடுவதாகக் கூறினர். அவர்களில் நால்வர் மாதாந்தம் ரூபா 1000 - 2000 வரை வட்டி கட்டுவதாகவும், ஒருவர் ஒரு வாகனத்தை தவணை வட்டிக்கு வாங்கி மாதாந்தம் ரூபா 5000 வட்டிக்காக ஒதுக்குவதாகவும் கூறினார்கள்.

**மருத்துவம் :** மருத்துவச் செலவு என்பது எல்லோருக்கும், எப்போதும் ஒரேயளவாக இருப்பதில்லை. நபருக்கு நபர், நாளுக்கு நாள் அது வேறுபடுகின்றது.

பெரும்பாலானோர் அரச வைத்தியசாலைக்குத் தான் செல்கின்றனர். தனியார் வைத்தியசாலைக்குச் செல்வோரின் மருத்துவத்திற்கான மாதாந்த செலவீனங்களைப் பின்வருமாறு நோக்கலாம்

ரூபா

200 - 500 :- 6 குடும்பங்கள்
500 - 1000 :- 4
1000 - 2000 :- 4
2000 இற்கு மேல் :- 6

எனினும், மருத்துவத் தேவைகள் அதிகரிக்கின்ற போது செலவிடும் பண அளவும் வேறுபடுகின்றது.

**போக்குவரத்து** : ஒவ்வொரு முறையும் போக்குவரத்துக்காக,

பேரூந்து ரூபா :- 50 அல்லது 100


முச்சக்கர வண்டி :- ரூபா 100 அல்லது 200

என்ற அடிப்படையில் செலவாகின்றது.

**தொலைபேசி பாவனை:** அங்குள்ள அனைவரிடமும் தொலைபேசி பாவனை காணப்படவில்லை. அவ்வாறு பாவனை செய்யும் குறிப்பிட்ட நபர்களிடம் கேட்ட போது, ரூபா 50 சிலருக்கு ஒரு நாளுக்கும், சிலருக்கு 3 நாட்களுக்கும், சிலருக்கு ஒரு கிழமைக்கும் மற்றும் சிலருக்கு ஒரு மாதத்திற்கும் போதுமெனக் குறிப்பிட்டனர். ரூபா 100 ஒரு கிழமைக்கு செலவாகுவதாகவும், சிலர் மாதத்திற்கான ரூபா 345 பெக்கேஜ் பயன்படுத்துவதாகவும் குறிப்பிட்டனர். எனினும், அவர்களுக்கு தொலைபேசிக்கென அதிக செலவு ஏற்படுவதில்லை என்றும் வெளிநாட்டில் வேலை செய்பவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு மாத்திரம் அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கென தொலைபேசிற்கான செலவு அதிகம் எனவும் குறிப்பிட்டனர்.

**சேமிப்பு** : சேமிப்பைப் பொறுத்தவரையில், அவர்களது நாளாந்த வருமானம் அன்றாடத் தேவைகளுக்கே போதுமானதாகி விடுகின்றன. அவர்களில் 6 பேர் மாத்திரமே சேமிப்பினை மேற்கொள்கின்றனர். இவ் 6 பேருள் இருவர் சீட்டு மூலமாக சேமிப்பதாக குறிப்பிட்டனர்.

இவை தவிர சொந்த வாகனங்களைக் கொண்டிருப்பவர்கள் அதற்காகவும் செலவிடுகின்றனர். எமது நேர்காணலில் ஒருவர் தன்னிடம் சொந்த வாகனம் இருப்பதாகக் குறிப்பிட்டார்.




மேலே காட்டப்பட்டுள்ள (Bar chart) பட்டை நிழல் விளக்கப்படமானது அளிகம்பை பிரதேசத்தில் நாம் ஆய்வுக்குட்படுத்திய 50 குடும்பங்களினதும் மாதாந்த மொத்த செலவீனங்களை எடுத்துக்காட்டுகின்றது. இவர்களில் 40% ஆன குடும்பங்கள் தமது வருமானத்தில் ரூபா. 10,000 - 20,000 வரையிலும், 28% ஆன குடும்பங்கள் ரூபா. 20,000 - 30,000 வரையிலும், 22% ஆன குடும்பங்கள் ரூபா. 30,000 - 40,000 வரையிலும், 10% ஆன

குடும்பங்கள் ரூபா. 40,000 இற்கு மேற்பட்ட அளவும் தமது அன்றாடத் தேவைகளுக்காக செலவிடுகின்றனர்.

**அளிகம்பை மக்களின் தொழில் முறைகள் பொருளாதார அபிவிருத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள்**

''பழையன கழிந்து புதியன புகுதல்'' என்ற அடிப்படையில் இன்று அளிகம்பை மக்கள் செயற்பட்டு வருகின்றனர். இவர்களில் வயதால் மூத்தவர்கள் பொருளாதார அபிவிருத்தியில் அதிக கரிசனம் செலுத்தாவிட்டாலும் இளைய தலைமுறையினர் விரைவாக மாறிவரும் உலகமயமாதல் நிலைக்குத் தம்மையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என விரும்புகின்றனர். இதன் விளைவாக பொருளாதாரத்திற்கு பிரதான பங்கு வகிக்கும் தொழில்துறைகளில் கவனத்தை செலுத்தி அதனூடாக ஓரளவேனும் பொருளாதார அபிவிருத்திக்கு செல்வாக்கு செலுத்தியுள்ளதைக் காண முடிகின்றது.

ஆரம்ப காலங்களில் வேட்டையாடுதல், பாம்பாட்டுதல் போன்ற வருமானம் குறைந்த தொழில்களில் ஈடுபட்டதால் அவை பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்க போதுமானதாக இருக்கவில்லை. ஆனால், காலப்போக்கில் அளிகம்பை மக்கள் விவசாயம், மீன்பிடி, கூலித்தொழில், அரச தொழில், வீட்டுத்தோட்டம், கடை வைத்திருத்தல், ஆடு, மாடு, கோழி வளர்ப்பு, தையல் போன்ற மரியாதைக்குரிய ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களில் ஈடுபட்டதனால் அவர்கள் தமது அன்றாடத் தேவைகளை நிவர்த்தி செய்த பின்னரும் பணம் கையிருப்பிலிருக்கும் நிலை உருவாகியது. இது பொருளாதாரத்திற்குப் பாரிய பங்களிப்பினை நல்கியுள்ளது எனலாம்.

ஆரம்பத்தில் புறக்கணித்த விவசாயத்தை தற்போது அதிக கரிசனத்துடன் செய்தல், மீன்பிடித்தலின் போது கிடைக்கும் மீன்கள் தமது தேவைக்கு அதிகமாக இருக்கும் பட்சத்தில் அவற்றை விற்று பணம் பெற்றுக் கொள்ளல், ஆடு, மாடு வளர்ப்பு மூலம் பெற்றுக்கொள்ளும் பால், கோழி வளர்ப்பு மூலம் பெற்றுக்கொள்ளும் முட்டை போன்றனவற்றில் மேலதிகமானதை பிறருக்கு விற்றல் போன்றன அளிகம்பை மக்களின் பொருளாதார அபிவிருத்திக்குச் சான்றாக விளங்குகின்றன.

மேலும், ஆரம்ப காலங்களில் தாம் நிம்மதியாக வாழ சொந்த வீடின்றி ஆபத்தான குடிசைகளில் வாழ்ந்த இம்மக்கள் தற்போது கல்லினாலான வீடுகளை தமக்கு சொந்தமாகக் கொண்டுள்ளனர். இது இவர்களின் தற்போதைய தொழில்துறைகளினால் ஏற்பட்ட விளைவே எனலாம். இதுவும் பொருளாதார அபிவிருத்திக்கு தொழில் துறைகளின் பங்கு எவ்வாறானது என்பதற்கு விடையளிக்கக் கூடியதாக விளங்குகின்றது.

அத்தோடு, இம்மக்கள் தமது ஆடை விடயத்திலும் அதிக கரிசனம் காட்டி வருகின்றனர். அதற்கென ரூபா 50,000 வரையிலும் செலவிடக் கூடிய மக்கள் இங்கு காணப்படுகின்றனர். ஒருசிலர் ஆடைகளைக் கொள்வனவு செய்ய கடன் எடுத்தாலும் அதிகமானோர் தமது தொழில்களின் முயற்சியினாலேயே இதற்கான பணத்தைப் பெற்றுக் கொள்கின்றனர்.

மேலும், முற்பட்ட காலங்களில் குடும்பத்தின் பிள்ளைகளும் பாடசாலைக்குச் செல்லாது உழைத்து அத்தொழில்கள் மூலம் கிடைக்கும் வருமானம் வாழ்க்கைச் செலவுக்குப் போதுமானதாகக் காணப்படவில்லை. ஆனால், தற்போது பிள்ளைகள் கல்வியறிவைப் பெறும் நோக்கில் கிராமப் பாடசாலைக்குச் செல்கின்றனர். அத்தோடு நில்லாது உயர்க்கல்வியைத் தொடர வெளிப்பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும் இங்கு காணப்படுகின்றனர். இதற்கான செலவு குடும்பத் தலைவன், தலைவியின் உழைப்பு மூலமே பெருமளவு ஈடுகட்டப்படுகின்றன. இவ்வாறு, பிள்ளைகளது கல்விக்காகச் செலவளிக்க இவர்களின் தற்போதைய தொழில்துறை பெரும் பங்காற்றுகின்றது என்றால் அது பொய்யாகாது.

இவர்களது கல்வியறிவு முன்னேற்றத்தின் விளைவாக அரச தொழிலில் ஈடுபடுவோரும் உருவாகியுள்ளனர். இம்முன்னேற்றத்திற்கு அடிப்படையாக விளங்குவதும் சிறந்த வருவாயினை ஈட்ட முடியுமான தொழில் வாய்ப்புக்களாகும்.

இம்மக்களின் அடிப்படை வசதிகளின் முன்னேற்றமும் பொருளாதார அபிவிருத்தியில் தொழில்துறையின் தாக்கத்தைப் பறைசாற்றுகின்றன. நீர், மின் இணைப்பு வசதிகள் காணப்படுகின்ற வீடுகள் காணப்படுதல், சமையலுக்காக எரிவாயு பயன்படுத்தும் வீடுகள் காணப்படுதல், போக்குவரத்துக்காக சொந்த வாகனங்களைக் கொண்டிருத்தல், விவசாயத்திற்குத் தேவையான இயந்திரங்களை வைத்திருத்தல், சொந்த நிலங்களை வைத்திருத்தல் போன்ற இன்னோரன்ன அடிப்படைத் தேவைகளைக் கொண்டிருப்பதில் இக்கிராம மக்கள் முன்னேற்றம் கண்டுள்ளனர். இவையும் கூட அவர்களின் தொழில்துறைகளின் வருவாயினூடாக பெற்றுக்கொண்டவை எனலாம்.

எனவே, ஆரம்ப காலங்களில் நிரந்தரமற்ற தொழில்களைக் கொண்டிருந்த இம்மக்கள் தற்போது நிரந்தரமான பல தொழில்களைக் கொண்டிருப்பதானது பொருளாதார அபிவிருத்தியில் பல தாக்கங்களை செலுத்தியுள்ளது எனலாம்.

## ஆய்வின் முடிவுகளும் பரிந்துரைகளும்

### முடிவுரை

அளிகம்பை பிரதேச பழங்குடி சமூகமானது ஏனைய மக்கள் பிரிவிலிருந்து வேறுபட்ட வாழ்க்கை அமைப்பு, பழக்கவழக்கங்களைக் கொண்டவர்களாக விளங்கிய நிலை மாறி புதிய உலகமயமாக்களுக்குள் தம்மை இட்டுச்சென்று நாகரிக உலக சமூகத்தில் தாமும் ஒரு அலகு என்பதற்கேற்ப தமது வாழ்வியலை மாற்றியமைக்க வேண்டுமென இவர்கள் அவாக் கொள்கின்றனர். இதனடிப்படையில் இவர்கள் தமக்கென அமைக்கப்பட்ட சில பாரம்பரிய பழக்கவழக்கங்களை உடைத்து புதுயுகத்தில் கால் பதிக்க முனைகின்றனர். இதன் விளைவாகவே இவர்களின் பாரம்பரிய தொழில்களை கைவிட்டு விவசாயம், கூலித்தொழில், மீன்பிடி, வீட்டுத்தோட்டம், வீட்டில் சொந்தக் கடை வைத்திருத்தல், அரச தொழில், ஆடு, மாடு, கோழி வளர்ப்பு, தையல் போன்ற தொழில்களில் ஈடுபடத் துவங்கியுள்ளனர் என்பது ஆய்வுத் தரவுகளினால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இத்தொழில்களினூடாக ஈட்டும் வருமானத்தைக் கொண்டு இவர்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். இவ்வாறு இவர்கள் தமது தேவைகளுக்கு செலவளிக்கும் வீதம் அதிகரித்துள்ள போக்கினைக் காண முடிகிறது. இது இவர்களது பொருளாதாரம் அபிவிருத்தியடைந்துள்ளதை எடுத்துக்காட்டுகின்றது.

இது இம்மக்களின் முன்னேற்றத்தை நோக்கிய சிறு நகர்வேயாகும். இம்மக்களின் தொழில் முயற்சிகளே இதில் பாரிய பங்கினை வகிக்கின்றன என்பது எமது ஆய்வுத் தரவுகளின் அடிப்படையில் புலனாகின்றது. இவர்கள் பொருளாதாரத்தில் மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டுமெனில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இம்மக்களுக்கு உதவிகளை வழங்க முன் வர வேண்டும். அத்தோடு, இம்மக்களின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக எதிர்காலத்திலும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இவர்களது முன்னேற்றம் பற்றிய தகவல்களை உலகறியச் செய்ய வேண்டும்.

**பரிந்துரை**

அளிகம்பை பிரதேச மக்களுக்கென சிறப்புத்திட்டங்களை அறிமுகம் செய்து வைத்தல் அரசினதும் ஏனைய சமூக நிறுவனங்களினதும் பாரிய பொறுப்பாகும். ஆகவே அவர்களுக்கு நீர்ப்பாசன வசதியுடன் கூடிய நிலபுலங்களை வழங்கும் போது விவசாயத்தில் ஈடுபாடு கொள்ளும் பண்புகள் அதிகரிக்கலாம். அத்துடன் உற்பத்திக்கான உள்ளீடுகளை இலவசமாகவும் மானியமாகவும் வழங்க வேண்டும். உற்பத்தி செய்யப்பட்டவற்றை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். கல்வி தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டு நிவர்த்தி செய்வதோடு, அனைத்து மாணவர்களினதும் மேற்படிப்புக்காக புலமைப்பரிசில் நிதியங்களை ஏற்படுத்தி அதன் மூலம் நகரப் பாடசாலைகளில் கல்விபெற வாய்ப்பளித்தல் வேண்டும்.

வேலை வாய்ப்பின்மை இக்கிராம மக்களிடம் அவதானித்த ஒரு முக்கியமான விடயமாக இருக்கின்றது. இக்கிராமத்தில் வாழும் இளைஞர், யுவதிகள் அரச தொழில்களில் ஈடுபட்டு தன் சமூக மரியாதையையும் குடும்பத்தையும் பாதுகாக்கும் நோக்கத்தில் ஆர்வத்துடன் உள்ளனர் என்பது களப்பயணம் சென்றதினூடாக தெரிய வந்தது. ஆகவே இவ்வாறானவர்களுக்கு நவீன தொழில்நுட்பக் கல்வியைக் கற்றுக்கொடுத்தல், புதிய தொழில்களை செய்வித்தல் போன்றவற்றினூடாக ஆற்றல் கொண்டவர்களை உருவாக்குதலில் கவனம் செலுத்துதல்.

தையற் தொழில் தெரிந்தவர்களுக்கு தையல் இயந்திரங்களை இலவசமாக கொடுத்தும் தையற் தொழில் பழக்கமில்லாதவர்களுக்கு இதனை பயிற்றுவித்தலின் மூலமும் அவர்களை ஊக்குவித்தல்.

தேசிய தொழில் பயிற்சி மையத்தினதும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தினதும் (UNDP) உதவியுடன் இவர்களினுடைய அனுபவ ரீதியான தொழில்களுக்கு

நவீனத்துவமூட்டி, பயிற்றுவித்து அவர்களை சுயமாக அல்லது நிர்வனப்படுத்தலினூடாக வேலை வாய்ப்பினை வழங்க முடியும்.

தேனீ வளர்ப்பு முறை ஒரு சிறந்த தொழில் வாய்ப்பாகும். இத்தகைய தேனீ வளர்ப்பு மூலம் குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் பெறலாம். இத்தகைய வாய்ப்பு இக்கிராமத்தில் காணப்படுவதனால் இம்மக்களுக்கு இது பற்றிய அறிவை கற்பித்து இக்கைத்தொழிலை நடைமுறைப்படுத்தலினூடாக பொருளாதாரத்தில் தேட்டத்தை ஏற்படுத்த முடியும்.

**உசாத்துணை**


நிஷாந்தினி உதயகுமாரன். த. (2013). *அளிகம்பை கிராமததின் சமூகக் கட்டமைப்பு சமூகவியல் ஆய்வு.*

குகபாலன். கா. (2000). *இலங்கை பழங்குடிகள் வனக்குறவர் வாழ்வியல் ஆய்வு.* கொழும்பு: புரணன் அசோசியேட்ஷ் பிறைவட் லிமிடட்.

குலசேகரன். (2002). *அளிகம்பை வனக்குறவர்களும் வாழ்க்கை முறையும்.*

பிக்கீர். எஸ் .எல் .எம். (2017). *அடிப்படை வசதிகளை இழந்து தவிக்கும் அளிகம்பை வனக்குறவர்கள்.* தினகரன் வாரமஞ்சரி.

மப்றூக். (2011). *அளிகம்பை வனக்குறவர் - கவனிக்கப்படாத சமூகம்.*

Riswan. M., Rameez. A., Lumna. N., (2017). *Social Economic and cultural challenges confronting Gypsis in aligambai village,* Srilanka (Vol. 1).

கிஸோா. (2015). *புறக்கணிப்புக்குள்ளாகும் அளிகம்பை கிராமம்.* Battinews.com

முஜாஹித். ஏ. எஸ். எம். *(2014). அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அங்குரார்ப்பணம்.* www.tamilmirror.lk

நிழலி. (2014). *அளிக்கம்பை குறவர் சமூகத்தின் கதை.* https://Yarl.com.

இராஜேஸ்வரன். மு. (2015). *அளிகம்பை கிராமம், பாடசாலை எதிர்நோக்கும் அவலங்கள்.* www.Tamilcnn.lk.

*ஆலையடிவேம்பில் வசிப்பதற்கு உகந்த வீடுகள் இன்றி அல்லலுருறும் வனக்குறவர்கள். (2016).* www.newsfirst;lk.